**ABSTRACT**

Schemes - Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme(MGNREGS) – Engagement of Worksite Supervisor (WSS) / Work Mate in Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme(MGNREGS) worksites – Tamil Nadu - Guidelines – Approved - Orders – Issued.

---

**RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (CGS.1) DEPARTMENT**

G.O.(Ms) No.110

Dated : 29.06.2024
குரோதி, ஆனி 15
திருவள்ளுவர் ஆண்டு 2055
Read :

1. G.O.(Ms.)No.80, Rural Development and Panchayat Raj (CGS-1) Department, dated 16.07.2013.
2. The Director of Rural Development and Panchayat Raj, Letter No.13977/2020/MGNREGS 2-1, dated 04.06.2024.

---------

**ORDER:**

In the Government order first read above, orders were issued to designate one of the Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme(MGNREGS) workers as Worksite Supervisor / Work Mate along with detailed Guidelines for Selection, Job Chart, remuneration etc.,

2. In the letter second read above, the Director of Rural Development and Panchayat Raj, has sent a draft revised State Specific Guidelines for Work Mate relating to Selection, Engagement, Job Chart etc., as per the Annual Master Circular 2022-23 under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) and requested the Government to issue orders in this regard.

3. The Government carefully examined the draft State Specific Guidelines for Work Mate sent by the Director of Rural Development and Panchayat Raj and decided to approve the same. Accordingly, the Government issue the revised State Specific Guidelines for Work Mate relating to Selection, Duties and responsibilities etc., under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) as per the Annual Master Circular 2022-23, in both English and Tamil, as annexed to this order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Director of Rural Development and Panchayat Raj, Chennai-15.
The Secretary, Government of India, Ministry of
Rural Development, Department of Rural Development,
Krishi Bhawan, New Delhi – 110 001.
All District Collectors (except Chennai)
(through the Director of Rural Development
and Panchayat Raj, Chennai – 15)
All Project Directors, District Rural Development Agencies,
(through the Director of Rural Development
and Panchayat Raj, Chennai – 15)

**Copy to:**
The Special Personal Assistant to Hon'ble Minister
(Rural Development), Chennai-9.
The Senior Private Secretary to Principal Secretary to Government,
Rural Development and Panchayat Raj Department, Chennai-9.
The Finance (Rural Development) Department, Chennai-9.
Stock File/ Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

**SECTION OFFICER**

**Government of Tamil Nadu**

**Rural Development and Panchayat Raj Department**

**Annexure**

**G.O.(Ms.) No.110, RD&PR (CGS 1) Department, dated 29.06.2024**

**Guidelines for Worksite Supervisor(WSS) / Work Mate under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS)**

**1.Introduction:**

Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme is being implemented in all 37 rural Districts. As per Para 7.11.1 of Operational Guidelines under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme, the designation of one of the workers as Work Mate to manage the worksite is permitted. In order to have free and fair selection and designation of Work Mate, the following guidelines are issued.

**2.Selection of Work Mate:**

Since more than one worksite is available in a Village Panchayat, one Work Mate shall be designated for each worksite. But in the case of Individual and Community works undertaken in the same Worksite, one Work Mate is enough for the both works. Considering the fact that the Work Mate should be selected through a fair, transparent and participatory process and to ensure adequate representation of women and Differently abled workers among Work Mate, the following procedure should be adopted for selection of the workmate.

a) All Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme workers of Village Panchayat, who have passed 8$^{th}$ Standard shall be eligible to be designated as Work Mate.

b) A Minimum of 50 days of work in previous years under the Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme is required for eligibility.

c) All Eligible persons shall be listed in the order of priority based on their educational Qualifications.

d) First preference shall be given to Differently abled workers. Differently abled workers shall be given priority irrespective of qualification in finalizing the order.

e) Since 75% of Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme workers are women, women workers shall be given preference. Only in case of non availability of eligible women, then a male worker shall be designated as Work Mate.

f) The habitation wise list should be prepared for each and every Village Panchayat from the interested/ qualified Workers. The above habitation wise list will be helpful to designate a person as Work Mate when the work is executed in that particular Habitation/cluster of Habitations.

g) Adequate number of Work Mates should be available in each village panchayat to ensure that there is a 'pool' of Work Mates at all the times. Hence 5 times of the clusters in a Village Panchayat shall be fixed for the selection of the number of Work Mates. For example, if the habitations are grouped into 4 clusters in the village panchayats, minimum 20 Work Mates shall be selected.

h) The List of Work Mates should be prepared by the Panchayat Secretary / Gram Rozgar Sahayak and Panchayat President.

i) 100% Verification of the list should be done by Zonal Deputy Block Development Officer.

j) 20% Verification of the list should be done by the Block Development Officer (Village Panchayat).

k) This list should be placed and approved in the Gram Sabha / Special Grama Sabha. It should be ensured that atleast 50% of the Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme workers are attending the above Grama sabha / Special Grama Sabha.

**3.Engaging Work Mate to worksite:**

Detailed Proceedings mentioning the name of the Work Mate for each worksite in the Village Panchayat should be issued by the Block Development officer (Village Panchayat) concerned.

4. **Duration of Working of Work Mate**

a) Work mate is eligible to work from the commencement to the Completion of that Work or 100 days in a Financial Year whichever is earlier.

b) If the Work is continued for more than 100 days, new Work Mate to be engaged after 100 days. **In no case, a Work Mate shall be continued for more than 100 days in a year.**

c) In case of absence of the designated Work Mate on certain days, then one of the trained Work Mates from the pool list available in the Village Panchayat shall be permitted to act as Work Mate.

d) When a new work is commenced, then another worker who is trained as Work Mate shall be designated as Work Mate. The worker so designated should preferably belong to the habitation where the work is to be executed.

**5. Training:**

Training should be given to the Workers selected for the Work Mate Pool list available in the Village Panchayat. Training for the Work Mate should be given in the following topics:

a) Awareness of the Scheme.

b) Using of NMMS application, updation of Job Cards.

c) Premarking the "pits" and "sections" to be undertaken by the workers.

d) Quantum of work to be done by the workers.

e) Measuring of the Works.

f) Provision of worksite facilities.

g) Every Work Mates should be provided with field kits. After the completion of the work or 100 days, it should be handed over to the Panchayats by the Work Mate.

**6. Job chart of Work Mates:**

The Work Mates shall be assigned with the following Duties and Responsibilities.

a) Obtaining electronic - Muster Roll (e.MR) from the Village Panchayat/Block Office through Gram Rozgar Sahayak/Employment Guarantee Scheme Work Co-ordinator (EGSWC) on the first day of the work.

b) Maintenance of e-Muster Roll at the worksite and making attendance every day.

c) Capturing and marking of Attendance in the NMMS application during Morning and Evening.

d) Making proper attendance entries in the Job card of every worker daily. Payment given details is also to be entered in the job cards weekly.

e) Formation of groups of 20 workers at the commencement of work every week.

f) Pre-marking the area of work execution for each group to earn the daily prescribed wage of the Financial year (as per the Rural Schedule of Rates).

g) Entering total number of days worked by the worker in the job card every month.

h) Measuring the task done by each group on a daily or weekly basis.

i) Ensuring the provision of worksite facilities like shelter, designating Labourers for child care, supply of water and medicine kits.

j) Assisting for maintaining Work File in the Worksites with Employment Guarantee Scheme Work Co-ordinator.

k) General worksite supervision. Dealing with emergencies such as accidents at the worksite.

l) The Work Mates will be directly responsible for ensuring the authentically of data entered in the muster rolls and the quality in the execution of works.

m) Assisting to Gram Rozgar Sahayak for conducting Rozgar Diwas.

**7. Wages to Work Mates.**

The wage of Work Mates should generally be similar to those of semi-skilled workers, hence, the wage rate should be paid as semi-skilled workers under MGNREGA-Material component. The amount shall be paid fully without any deduction but maximum of 100 days only. The wage for the Work Mates shall be paid on Weekly basis.

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

SECTION OFFICER

**தமிழ்நாடு அரசு**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**இணைப்பு**

**அரசாணை (நிலை ) எண்.110, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 29.06.2024**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் பணி மேற்பார்வையாளர் / பணி இணையாளர் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்**

**1. அறிமுகம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து 37 ஊரக மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகள்–பத்தி 7.11.1 இன் படி, இத்திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களில் ஒருவரை பணி இணையாளராக தேர்வு செய்து பணித்தளப் பணிகளை மேற்பார்வையிட அனுமதியளித்துள்ளது. வெளிப்படையான முறையில் பணி இணையாளர் தேர்வு மற்றும் நியமனம் குறித்து கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

**2. பணி இணையாளர் தேர்வு.**

ஒன்றுக்கு மேற்பட்ட பணித்தளங்கள் ஒரு கிராம ஊராட்சியில் இருப்பதால், ஒவ்வொரு பணிக்கும் ஒரு பணி இணையாளர் தேர்வு செய்யப்பட வேண்டும். ஆனால், தனிநபர் மற்றும் சமுதாய பணி ஆகிய பணிகள் ஒரே பணித்தளத்தில் மேற்கொள்ளப்படும் சமயங்களில், ஒரு பணி இணையாளரே இருபணிகளுக்கும் போதுமானதாகும். பணி இணையாளர்கள் வெளிப்படையான மற்றும் பங்கேற்பு முறையில் தேர்வு செய்யப்பட வேண்டியும், பணி இணையாளர்களின் தேர்வில் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்திட வேண்டியும். கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

அ. கிராம ஊராட்சியில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கும் அனைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களும் பணி இணையாளராக தகுதியானவர்கள்.

ஆ. இவர்கள் கடந்த வருடங்களில் குறைந்தது 50 நாட்களாவது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரிந்திருக்க வேண்டும்.

இ. தகுதியான நபர்களை கல்வித் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

ஈ. மாற்றுத் திறனாளிகளுக்கு முதல் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதாவது மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வித் தகுதியினை கருத்தில் கொள்ளாமல் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்

உ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களில் 75% பெண்கள் ஆதலால், பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தகுதியான பெண் தொழிலாளர்கள் இல்லையெனில் ஆண் தொழிலாளரை பணி இணையாளராக நியமனம் செய்யப்படலாம்.

ஊ. விருப்பமுள்ள / தகுதியுள்ள தொழிலாளர்களிடமிருந்து, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், குக்கிராமம் வாரியாக தேர்வு பட்டியல் தயாரிக்கப்பட்ட வேண்டும். குக்கிராமம் வாரியாக தேர்வு பட்டியல் தயாரிக்கப்படுதலில், குறிப்பிட்ட குக்கிராமம் / குக்கிராமத் தொகுப்பில் பணி நடைபெறும் போது, சம்பந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்தவரை பணி இணையாளராக தேர்வு செய்ய இயலும்.

எ. ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் அனைத்து நேரத்திலும் பணி இணையாளர்களின் தொகுப்பு பராமரிப்பதினை உறுதி செய்து, கூடுதல் எண்ணிக்கையில் பணி இணையாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். ஒரு கிராம ஊராட்சியில் செயல்பட்டு வரும் பணித்தளங்களின் 5 மடங்கு எண்ணிக்கையில் பணி இணையாளர்கள் தேர்வு செய்திட இலக்கு நிர்ணயிக்க வேண்டும். உதாரணமாக ஒரு கிராம ஊராட்சியில் 4 பணித்தளங்கள் இருப்பின், குறைந்தது 20 பணி இணையாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ஏ. பணி இணையாளர் பட்டியல் தயாரிப்பு, கிராம ஊராட்சி செயலர் / வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர், ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர்கள் மூலம் தயாரிக்கப்பட வேண்டும்.

ஐ. மேற்படி பட்டியல் 100% மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்.

ஒ. வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) மேற்படி பட்டியலினை 20% சரிபார்க்கப்பட வேண்டும்..

ஓ. மேற்படி தேர்வு பட்டியல் கிராம சபை / சிறப்பு கிராம சபை கூட்டத்தில் வைக்கப்பட்டு, அனுமதி பெறப்பட வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களில் குறைந்தபட்சம் 50% தொழிலாளர்கள் மேற்படி கிராம சபை / சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கலந்து கொள்வது உறுதி செய்யப்பட வேண்டும்.

**3. பணி இணையாளரை பணித்தளத்தில் ஈடுபடுத்துதல்**

கிராம ஊராட்சியில் உள்ள ஒவ்வொரு பணித்தளத்திற்கும் தொழிலாளர் பெயர் குறிப்பிட்டு செயல்முறை ஆணைகள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மூலம் வழங்கப்பட வேண்டும்.

**4. பணி இணையாளர் பணி புரியும் கால அளவு**

அ. நியமனம் செய்யப்படும் பணி இணையாளர், பணி தொடங்கப்பட்டது முதல் முடிவடையும் வரை அல்லது ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் இவற்றில் எது முந்தியதோ அந்த நாள் வரை பணி இணையாளராக பணிபுரிய தகுதியானவர் ஆவர்.

ஆ. பணியானது 100 நாட்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டால் 100 நாட்களுக்கு பிறகு புதிய பணி இணையாளர் ஈடுபடுத்தப்பட வேண்டும். எந்த நிலையிலும், பணி இணையாளர் நிதியாண்டில் 100 நாட்களுக்கு மேல் பணிபுரிதல் கூடாது.

இ. குறிப்பிட்ட நாட்களில் பணி இணையாளர் வருகை தரவில்லை எனில், கிராம ஊராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பணி இணையாளர்களின் தேர்வு பட்டியலில் இருந்து ஒரு பயிற்சி பெற்ற பணி இணையாளர், பணி இணையாளராக செயல்படுவார்.

ஈ. புதிய பணி தொடங்கும் போது, மற்றொரு பயிற்சி பெற்ற தொழிலாளர் பணி இணையாளராக நியமனம் செய்யப்பட வேண்டும். பணி நடைபெறும் குக்கிராமத்தில் இருக்கும் தொழிலாளருக்கு பணி நியமனம் வழங்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**5. பயிற்சி**

கிராம ஊராட்சியின் பணி இணையாளர்களின் தேர்வு பட்டியலில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். பணி இணையாளர்களுக்கான பயிற்சியில் கீழ்காணும் தலைப்புகள் இடம்பெற வேண்டும்.

அ. திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

ஆ. மின்னணு வருகைப் பதிவேடு செயலியினை பயன்படுத்துதல் மற்றும் வேலை அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளுதல்.

இ. தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் குழிகள் மற்றும் பிரிவுகளை முன்அளவீடு செய்தல்

ஈ. தொழிலாளர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலை அளவினை நிர்ணயித்தல்

உ. வேலையினை அளவீடு செய்தல்

ஊ. பணித்தள வசதிகள் வழங்குதல்

எ. அனைத்து பணி இணையாளர்களுக்கும் களத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட வேண்டும். பணி முடிந்த பிறகு அல்லது 100 நாட்கள் பணி நிறைவடைந்த பிறகு, அப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு பணி இணையாளரால் கிராம ஊராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**6. பணி இணையாளர்களின் பணிகள்**

பணி இணையாளராக நியமனம் செய்யப்படுபவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது.

அ. பணியின் முதல் நாளில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மன்ற அலுவலகம் / வட்டார அலுவலகத்திலிருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலமாக மின்னணு தினசரி வருகை பட்டியல் (e-MR) பெறப்பட வேண்டும்.

ஆ. மின்னணு வருகைப்பதிவேட்டினை பணித்தளங்களில் பராமரித்தல் மற்றும் ஒவ்வொரு நாளும் வருகை பதிவு செய்தல்.

இ. காலை மற்றும் மாலை வேளைகளில் மின்னணு வருகை பதிவேடு செயலியினை பயன்படுத்தி புகைப்படம் எடுத்தல் மற்றும் வருகைபதிவேட்டினை மேற்கொள்ளுதல்.

ஈ. தினந்தோறும் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் வேலை அட்டையில் வருகையினை பதிவு செய்தல். வாரந்தோறும் ஊதியம் பெற்ற விவரங்களையும் பதிவு செய்தல்.

உ. ஒவ்வொரு வாரத்தின் தொடக்கத்திலும் 20 தொழிலாளர்கள் கொண்ட குழுக்கள் உருவாக்கப்படுதல்.

ஊ. நிதியாண்டில் பரிந்துரை செய்யப்பட்ட தினக்கூலியினை (ஊரக விலை பட்டியல்படி) பெறும் வகையில் ஒவ்வொரு குழுவிற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அளவு முன்அளவீடு செய்யப்பட வேண்டும்.

எ. தொழிலாளர்களின் வேலை அடையாள அட்டையில் தொழிலாளர்கள் செய்த மொத்த வேலை நாட்கள் மாதம் ஒரு முறை குறிக்கப்பட வேண்டும்.

ஏ. தினசரி அல்லது வாராந்திர அடிப்படையில், ஒவ்வொரு குழுவும் செய்த பணியின் அளவீடு எடுக்கப்பெறுதல் வேண்டும்.

ஐ. பணித்தளங்களில் நிழற்கொட்டகை அமைத்தல், குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்கு ஒரு தொழிலாளரினை நியமனம் செய்தல், குடிநீர் வழங்குதல் மற்றும் முதலுதவி பெட்டி போன்ற அடிப்படை வசதிகளை பணித்தளத்தில் உறுதி செய்தல்

ஒ. பணித்தளத்தில் பணிக்கோப்பினை பராமரிக்க வேலை உறுதித் திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு உதவுதல்

ஓ. பணித்தளங்களில் உள்ள பொதுவான பணிகளை மேற்பார்வையிடுதல். பணித்தளத்தில் ஏற்படும் விபத்துக்கள் போன்ற அவசர காலங்களைக் கையாளுதல்.

ஔ. தினசரி வருகைப் பட்டியல்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து பதிவுகளுக்கும், மேற்கொள்ளப்பட்ட பணியின் தரத்திற்கும் பணி இணையாளர்களே நேரடி பொறுப்பாவார்கள்.

ஃ. வேலை உறுதித் திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு வேலை வாய்ப்பு தினத்தை நடத்துவதற்கு உதவுதல்

**7. பணி இணையாளர்களின் ஊதியம்**

பணி இணையாளர்கள் வழக்கமான நடைமுறையின்படி, பகுதி திறன்சார்ந்த தொழிலாளராக கருதப்படுவார்கள். ஆகையினால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பொருட்கூறு நிதியிலிருந்து பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களாக ஊதியம் வழங்கப்பட வேண்டும். இந்த தொகை எவ்வித பிடித்தமும் இன்றி 100 நாட்களுக்கு மிகாமல் பணி இணையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பணி இணையாளரின் ஊதியம் வாராந்திர அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

**ப.செந்தில்குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்